Register as a N paper eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
23-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ௫௫] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆவணிமீ ௩௧௨( 1943 செப்டம்பர்மீ 16 வியாழக்கிழமை) [இல. ௬௫

## இலங்கை வழக்கறிஞர் சங்கம்

இலங்கை வழக்கறிஞர் சங்கம் சென்ற சனிக்கிழமை தலைவர் திரு எஸ். ஜே. வி. கதிர்காமர் தலைமையிற் கூடியது. அப்பொழுது சட்ட நிர்வாக சபையும நிரந்தர நிர்வாக சபையும் தயாரித்துச் சமர்ப்பித்திருந்த நகற் சட்டம் அங்கீகரிக்கப் பட்டது.

பின்னர்ச் சங்கத்தின் உப சட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றைப் பரிசிலனை செய்து நிறைவேற்றும் பொருட்டுச் சபையின் விசேஷ கூட்டமொன்றை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## கடைக்காரரின் மரண விசாரணை

தங்காலை செப் 13—

அம்பாந்தோட்டையைச் சேர்ந்த என். டேவித் என்னும் கடைக்காரர் கத்தியாற் குத்திக் கொல்லப் பட்டதாகச் சொல்லப்படுவதை யொட்டித் தங்காலை நீதிபதி விசாரணை நடத்தினர். குறித்த சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படும் ஸ்தலத்தில் விசாரணை நடைபெற்றது.

எஸ். வி. டேவிட் ராமா என்னும் கரோலிஸ் ஆகிய இரு சந்தேகப் பேர்வழிகள் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

## ஹொங்கொங்மீது அமெரிக்க வெடிகுண்டு

நியூயோர்க் செப் 13—

சீனவிலுள்ள அமெரிக்கவிமானங்கள் ஹொங்கொங்கிலுள்ள சத்துரு ஸ்தாபனங்களைத் தாக்கிப் பெரும் சேதம் விளைவித்தன வென்று மத்திய செய்தி ஸ்தாபனம் அறிவிப்பதாகச் சுங்கிங் ரேடியோ கூறியதை அமெரிக்க யுத்த விளம்பரப் பகுதி கேட்டது.

## ஸ்ரீமதி. பெர்னுட்ஷோ காலமானர்

லண்டன் செப் 14—

உலகப் பிரசித்தி பெற்ற அறிஞரான ஜோர்ஜ் பெர்னுட்ஷோவின் மனைவி இன்று மரணமடைந்தார். 87 வயதுக் கிழவரான அறிஞர் ஷோவோடு அவர் மனைவி 45 வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்.

அறிஞர் ஷோ இன்று தமது மனைவியின் பிரிவுக்காக வருந்துகிறார். அவ்விருவரும் 1889-ம் ஆண்டு விவாகஞ் செய்து கொண்டனர்.

## இலவம் பஞ்சை விருத்தி செய்ய ஆலோசனைகள்

விவசாயப் பகுதியில் தாவரசாஸ்திரநிபுணர் தாம் சமீபத்திற் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையொன்றில் இலங்கை இலவம் பஞ்சை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளைக் குறிப்பிட்டுள்ளார். திரு. கே. ஸி. ஹேக் என்னும் இவ்வதிகாரி இந்தியா யாவா ஆகிய நாடுகளுக்கு 1938-ம் ஆண்டு விஜயஞ் செய்திருந்தார்.

# பிரியான்ஸ்க் புகைரத நிலையங்களை ருஷியர் கைப்பற்றினர்

மொஸ்கோ செப் 13—

பிரியான்ஸ்ப் புகைரத ஜங்ஷன்களிரண்டையும் செஞ்சேனை கைப்பற்றிக்கொண்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. இப்போது செஞ்சேனைபிரியான்ஸ்க் நகரை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

பிரியான்ஸ்க் நகருக்குத் தெற்கே ஏறக்குறைய இரண்டரை மைல் தூரத்தில் பிரியான்ஸ்க் புகைரத ஜங்ஷன்கள் இருக்கின்றன ஸ்மோலென்ஸ்க் ஓரல் குர்ஸ்க் கார்க்கோவ் கோமெல் ஆகிய இடங்களுக்குச் செல்லும் புகைரதப் பாதைகள் இங்கு சந்திக்கின்றன. இவ்விரண்டு ஜங்ஷன்களும் ஒன்றுக்கொன்று ஒன்றரை மைல் தூரத்திலிருக்கின்றன.

உச்சநிலையை அடைகிறது

சோவியத் வலுத் தாக்குதல் ஒரு புதிய போக்கிற் சென்று இப்போது உச்சநிலையை அடைந்து கொண்டிருக்கிறது. ஸ்மோலென்ஸ்கிலிருந்து அஸோவ் கடல்வரை 800 மைல் நீளமுள்ள யுத்த அரங்கத்தில் இருக்கும் ஆறு ஜெர்மன் அரண்களுக்கும் இப்போது ஆபத்தேற்பட்டிருக்கிறது. பிரியான்ஸ்க் மீதும் கீவுக்குச் செல்லும் பாதையிலுள்ள லொஸின நகர்மீதும் இப்போது பிரங்கிப் பிரயோகஞ் செய்யப்பட்டு வருகிறது. தெற்கு அரங்கத்தில் ருஷ்யர் அதிதுரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

கார்க்கோவுக்குத் தென்மேற்கேயுள்ள பகுதியில ருஷ்யர் சென்ற 24 மணி நேரத்திற் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறி யிருக்கின்றனர். கீவுக்குச் செல்லும் புகைரதப்பாதையை அவர்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். கீவுக்குச் செல்லும் பாதையைச் செஞ்சேனை இரண்டுபக்கத்தால் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எதிர்ப்பு இருந்தவரினும் செஞ்சேனை முன்னேறிக் கொண்டே வருகிறது.

ஸ்டாலினேவுக்கு மேற்கே சண்டை

இன்று வெளியிடப்பட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

செப்டம்பர் மாதம் நமது துருப்புகள் ஸ்டாலினேவுக்கு மேற்கே தங்கள் வலுத்தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி நான்கு முதல் ஒன்பது மைல்கள்வரை முன்னேறின. ஜனங்கள் வசிக்கும் 90 இடங்களும் கைப்பற்றப் பட்டன. மெலின் பகுதியில் நமது படைகள் முன்னேறிய போது ஜனங்கள் வசிக்கும் 40 இடங்களும் பல புகைரத நிலையங்களும் கைப்பற்றப் பட்டன.

ஏனைய அரங்கங்களிலும் செஞ்சேனை வெற்றிகரமாகச் சத்துருவைப் பின்தள்ளிக் கொண்டு பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டது. நேற்று யுத்த அரங்கம் முழுவதிலும் 14 ஜெர்மன் டாங்கிகள் மூடமாக்கப்பட்டன. 18 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

ஜேர்மானியருக்கு மகத்தான சேதங்கள்

ஸ்டாலினேவுக்கு மேற்கே நடைபெற்ற சண்டையில் 1500 ஜெர்மானியர் கொல்லப்பட்டதாகவும் நான்கு ஜெர்மன் டிவிஷன்கள் பூரணமாக அழிக்கப்பட்டு விட்டனவென்றும் சோவியத அறிக்கையின் அநுபந்தம் கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது:

பிரியான்ஸ்க் புகைரத நிலையங்கள் இரண்டுக்குமாக நடைபெற்ற சண்டையில் 2000 ஜெர்மானியர் கொல்லப் பட்டனர். பலர் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

6000 தொன் நிறையுள்ள ஜெர்மன் துருப்புக் கப்பலொன்றும் ஒரு கடற்கரைப் பாதுகாப்புக் கப்பலொன்றும் போல்டிக் விமானப் படையைச் சேர்ந்த விமானங்களால் ஆழ்த்தப்பட்டது. அஸோவ் கடலில் இரண்டு ஜெர்மன மோட்டார் டோர்பிடோப் படகுகளும் இரண்டு படையெடுப்புப் படகுகளும் மூழ்கடிக்கப் பட்டன.

## வியாபாரிக்கு ரூபா 500 அபராதம்

கொள்ளை லாபத்துக்கு மிளகாய்த்தூள் விற்பனை

அவிசாவளை செப் 13—

ரூவான்வெல்லையைச் சேர்ந்த இம்புல்கொடையிலுள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனத்தைச் சேர்ந்த டி. எல். பின் சிங்கோ என்னும் விற்பனைகாரர் கட்டுப்படுத்தப்பட்ட ஆகக் கூடுதலான விலைக்கதிகமாகக் காலுறுத்தல மிளகாய்த்தூள் விற்றதாகக் குற்றஞ்சாட்டிதத் தொடரப்பட்ட வழக்கு அவிசாவளைப் பொலிஸ் கோட்டில விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபொழுது எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி அவருக்கு ரூ 500 அபராதம் விதித்தார். கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு 9 சதம் கூடுதலாக எதிரி [illegible] இவ்வழக்கிற் குற்றஞ் [illegible].

## சுவாமி விபுலானந்தாவுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கலாநிலையம் ஆகிய இருஸ்தாபனங்களினதும் ஆதரவில் யாழ்ப்பாணம் கலாநிலைய மண்டபத்தில் உயர்திரு. சுவாமி விபுலானந்தா அவர்களுக்கு நிகழும் அக்டோபர் மீ 2-ந் திகதி ஒரு பகிரங்க வரவேற்பு அளிக்கப் படும். திரு. S. நடேசன் B A BL அவர்கள் தலைமை வகிப்பார்.

## இந்திய சட்டசபைக் கூட்டம்

புதுடில்லி செப் 11—

மத்திய சட்டசபையின் அடுத்த கூட்டம் புதிய டில்லியில் நவம்பர் எட்டாந்திகதி ஆரம்பமாக வேண்டுமென தேசாதிபதி ஜெனறல் அறிவித்திருக்கிறார்.

## மிஸ்றர். பிலிப்ஸ் இந்தியா வருகிறார்

வாஷிங்டன் செப் 11

மிஸ்றர். பிலிப்ஸ் தற்காலிகமாக யுத்தப்பகுதி உத்தரவுப்படி லண்டன் போகிறார் என்பதிலிருந்து அவர் இந்தியாவுக்கும் பின்பு திரும்புவாரென்பது தெளிவாகிறது. ஆனல், அதிகாரிகள் ஒன்றும்கூற விரும்பவில்லை. அவர் லண்டனுக்கு யுத்த நிமித்தமாகப் போவதிலிருந்தே இராணுவ விஷயந்தான் அமெரிக்கரில் பிரதானமாகக் கருதப் படுகிறது என்பதும் திண்ணமாகத் தெரிகிறது.

லோர்ட் லூயி மவுண்ட் பேட்டனுக்குப் பின் மிஸ்றர் பிலிப்ஸ் இந்தியா வருவாரெனவும் கூறப்படுகிறது. அவர் ஜப்பானியப்போர்விஷயமாகத் திட்டம் தயாரிக்க உதவி புரிவாரெனப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மிஸ்றர். பிலிப்ஸ் லண்டனுக்கு இன்னும் புறப்படவில்லையெனவும் தெரிகிறது.

## சிந்துமாகாணத்தில் மதுவிலக்கு

காராச்சி செப் 10—

சிந்து மாகாணத்தில் சிறிது சிறிதாக சாட்டுச்சாராய விற்பனையை நிறுத்தத் திட்டம் போட்டிருப்பதற்கேற்ப இப்போதே நூற்றுக்கு 50 வீதம் அக்கடைகளை மூடிவிட்டார்கள். இன்னும் சில கடைகளை மூடவும் உத்தேசித்திருக்கிறார்கள். கஞ்சா விற்பனையும் விரைவில் நிறுத்தப்படும் எனத் தெரிகிறது. அபின் விற்பனையைப் பூரணமாகத் தடுக்க இப்போது எண்ணமில்லாவிட்டாலும் அதன் விற்பனை சம்பந்தமாகச் சில நிர்ப்பந்தங்கள் இப்போது விதிக்கப்படுமெனத் தெரிகிறது.

## லூயி பிஷர் வியாசங்கள்

இந்திய அரசாங்க உத்தரவில் மாற்றம்

புதுடில்லி செப் 11 உ

அமெரிக்க ஆசிரியரான மிஸ்றர். லூயி பிஷர் வியாசங்களை வெளியிடுவதுபற்றி அரசாங்கம் முன்னம் பிறப்பித்த தடையுத்தரவில் அந்நிய நாட்டுப் பத்திரிகைகளுக்கு அவர் எழுதும் வியாசங்கள் உட்பட எல்லாவற்றையும்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயின், இப்போது அந்தத் தடையுத்தரவைச் சற்றுத் திருத்தியிருக்கிறார்கள். அந்நிய நாட்டிலிருந்து அவரால் அனுப்பப்படும் வியாசங்கள் பிறத்தானிய இந்தியாவிற் பிரசுரிக்கப்படுமுன், அதைப் பிரதம அச்சுக்கூட ஆலோசனையாளருக்கு அனுப்பி அங்கீகாரம் பெறவேண்டுமென்றும், அங்கீகாரம் பெறுமுற பத்திரிகை ஆசிரியரோ பிரசுர கர்த்தரோ அச்சுக்கூடச் சொந்தக்காரரோ வெளியிடக்கூடாதென்றும், இது சம்பந்தமாக முன்னம் வெளியிடப்பட்ட அறிக்கை இதனால நீக்கப்படுவதாகவும் இப்போது பாதுகாப்புச் சட்டப்படி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஆவணிமீ ௩௧ உ வியாழக்கிழமை

## கோயில்களைப் பாதுகாத்தல்

இற்றைக்குப் பலவருடங்கட்குமுன்னர்ச் சில காலம் சைவக் கோயில்களுள் இராக் காலத்திற் புகுந்து திருடுதலும், அங்குள்ள மூர்த்திகளைப் பெயர்த்து அம்மூர்த்திகளின் கீழ் வைக்கப்பட்டுள்ள பொன்னாலாகிய யந்திரத் தகடுகளை எடுத்துச் செல்வது மாகிய தீச்செயல்கள் நேர்ந்ததுண்டு; ஆனாலும், அக்காலத்தில், கோயிலதிகாரிகளும், கோயிலின் அயலிலுள்ளாரும், தெய்வபக்தி சமயாபிமானங்கள் பூண்டார் பலரும் கோயில்களைத் திருடுதலாகிய பெருந் தீமையைத் தடுக்க முற்பட்டு நின்றமையினால் அந்த நேரத்தில் அத்தீமை தேய்ந்து காலகதியில் இல்லா தொழிந்தது. ஆனால், இப்பொழுது சில மாசங்களாகப் பழையபடி கோயில்களில் திருடுதலாகிய சிவத் துரோகச் செயல் தொடங்கி விட்டது. சென்ற மாசம் புலோலிப் பசுபதீவரர் கோவிலில் நேர்ந்த திருட்டுத் தொழிலெனிலோ மிகவும் துணிகரத்தோடும் வன்கண்மை யோடுங் கூடியதென்னலாம். தொகுத்துச் சொல்லுமிடத்தில், அந்தப் புராதன சிவாலயத்தில நடந்த செயல் திருட்டுச் செயலன்று கொள்ளை யடித்தலாகிய பெரிய அக்கிரமமாகும்.

சனசஞ்சாரம் அதிகமுள்ளதாகிய பட்டினத்தின் மத்தியில், இரண்டுபக்கம் கடைவீதிகளாகிய தெருக்களாக, ஏனைய இரண்டு பக்கம் மடங்களோடு கூடிய திருவீதிகளாக இவ்வாலயம் அமைந்திருக்கின்றது; முதற் பிரகாரமும் இரண்டாம் பிரகாரமும் தனித்தனி நான்கு மதில்களாற் சூழப் பட்டனவாய், கோபுர வாயில்களும் ஏனைய வாயில்களும் அர்த்தயாமப் பூசை முடிந்த பின் கபாட பந்தனம் பண்ணப்பட்டனவாய்ப் பாதுகாப்போடு கூடியனதாக வுள்ளது. இக்கோயிலில் முன் எக் காலத்தாயினும் களவு போனதாகக் கேள்விப் பட்டது மில்லை. இப்படியான பாதுகாப்புக்களோடு கூடிய திருக்கோயிலில் ஓட்டைப் பிரித்தும் பூட்டை முறித்தும் பாதுகாப்பைக் கெடுத்து உட்புகுந்து மூர்த்திகளைப் பங்கஞ் செய்து பொருளைக் கொள்ளை கொண்டனரென்றால் இச் செயல் படுபாவிகள் செய்த துணிகரமான அக்கிரமச் செயலல்லவா? முன்னர் இப்படியான செயலை எவ்வகைத் திருடருஞ் செய்யமாட்டார்களென்ற அறியாமையோடு கூடிய ஒரு நம்பிக்கை சைவ மக்கள் பலரிடத்துக் குடி கொண்டிருந்தது; ஆனால், இச் சிவாலயத்தில் இத் துரோகச் செயல் நடந்ததை யறிந்த பின் இது மாத்திரமல்ல இதனைக் காட்டிலும் இன்னும் அதிகமாக அநர்த்தம் விளைவிக்கக் கூடிய ருடுத் தொழில் நடக்குமெனக் காத்திருக்க வேண்டியதே யாம்.

குறித்த சிவன் கோயிலில மாத்திரமன்று, இக் கோயிலில் திருட்டுத் தொழில் நடக்கச் சில தினம் முந்தியும் பிந்தியும் வேறு வேறு ஊர்களில், சில ஆலயங்களில் இப்படியான களவு நேர்ந்ததை நாம் அறிவோம். சில தினங்கட்கு முன்னர் இந்த வண்ணார்பண்ணையிலுள்ள ஒரு கோயிலிலும் திருடர் புகுந்து பாதி திருடியும பாதி திருடமுயன்ற விடத்தில, ஏதோ தடை நேர்ந்தமையினாற் போலும், திருடாமல் விட்டும் போனதை நாம் அறிவோம்.

இங்ஙனமெல்லாமிருத்தலினால் இப்படியான திருட்டுத் தொழில் நடவாமல் தடுப்பதற்கு, ஆங்காங்குள்ள சைவ மக்கள் செய்ய வேண்டிய கருமம் என்னவென்பதே இப்பொழுது யோசிக்கத் தக்கது. திருடர்களுக்குப் புத்தி புகட்டி அவர்களைத் திருடாமல தடுகக முடியமா? முடியாது. பின்னர்ச் செய்வதென்ன? கோயில்களிற் செய்ய வேண்டிய பாதுகாப்புக்களெல்லாஞ் செய்து விட்டு, இராக் காலங்களிற் கோயில காப்போரை நியமிக்க வேண்டியது தான் முறை; இந்த முறை ஆந்திராவிலுள்ள பிரதான ஆலயங்களில தொன்று தொட்டு நடந்து வருகின்றது; இங்குள்ள ஆலயங்களிலும காவற்காரரை நியமித்தல் வேணடும். கோயிலதிகாரிகளும் தெய்வத்தை வழிபடுவோரும் இதன் பொருட்டு மாசந்தோறும பணமுதவுதல் வேணடும். கோயிற் பாதுகாப்பையே பிரதான கருமமாகக் கொண்டு அதன் பொருட்டுப் பணஞ் செலவிடுதலினால வருவது நன்மையேயல்லாமல் தீமை யாது மில்லையாம. அரன் அன்றறுக்கும தெய்வம் நின்றறுக்கு மென்பதை எவரும் மறந்துவிட வொண்ணாது.

---

## பட்டினசபை விசேஷ கூட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம் செவ்வாய்

யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவர் திரு. K. ஐயாத்துரை கரையூர் அழுக்கு நீக்கத்துக்காக ஸ்தல ஸ்தாபன அரசாங்கத்தார் 20,000 ரூபா ஒதுக்கி வைப்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு விசேஷ கூட்டத்தை நேற்றுக் கூட்டுதற்காக அறிவித்தல் கொடுத்திருந்தார்.

கூட்டத்திற்கு ஓர் அங்கத்தவரும வரவில்லை. தலைவர் மாத்திரமே சமுகமாயிருந்தார். ஆகவே கூட்டம் கைவிடப்பட்டது.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

## "பண்ணிய பயிரிற் புண்ணியந்தெரியும்"

சின்னம்மாள் கந்தசாமியைக் கூப்பிட்டு அக்கடிதத்தை அவன் கையிற் கொடுத்து "மகனே, இதை மெல்ல வாசி" என்று சொல்லுதலும், அவன் அப்படியே வாசித்தான்; வாசித்துக்கொண்டு போம்போது கந்தசாமி கவலைப்பட்டான்; சின்னம்மாள் கண்களில் நீர்ததும்பக் கலக்கமடைந்தாள்; சண்பகத்தம்மாளின் துயரம் அதிகப்பட்டது; அதனை அவதானித்த சின்னம்மாள் அவளைப் பார்த்து "தங்கைச்சி, நீர் எதற்கும் கவலைப் படவேண்டாம்; உங்கள் பிள்ளையின் உயிருக்கு ஒருவகையான இடையூறும் வரமாட்டாது. நீங்களெனிலோ புண்ணியத்தோடு கூடியவர்களாயிருக்கிறீர்கள்; உங்களுக்கு ஏதும் ஆபத்து நேர அந்தப் பெருமான் விடமாட்டார்; பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும் என்றபடி உங்கள் மக்களின் ஒழுக்கத்தையும் பெருந்தன்மையையும் ஆதரவோடு கூடிய செயல்களையும் அவதானிக்கவே அவர்களைப் பிள்ளைகளாகப்பெறும் பாக்கியமுடைய உங்கள் புண்ணியம் எப்படிப்பட்டதென்பதை உலகம் அறியும். உலகத்திலே இன்பமுந் துன்பமும் நன்மையுந் தீமையும் செல்வமும் வறுமையும் நல்ல காலமும் பொல்லாத காலமும் எவர்க்கும் மாறி மாறி வருவதும் போவதும் சகசந்தானே, தங்கைச்சி; எதற்கும் தெய்வத்தின் திருவருளை நாம் இரந்து நிற்கவேண்டும்; தெய்வத்தின் சகாயமுண்டானால் வெயிலைக் கண்ட பனிபோல எல்லாத்தீங்குகளும் இடையூறுகளும் நீங்கிவிடும். படித்த உமக்கு நான் அதிகஞ் சொல்லவேண்டுமோ" என்று சொல்லிச் சண்பகத்தம்மாளைத் தேற்ற முயன்றாள். "அக்கா, நீங்கள் சொல்வதை நான ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால், கைரேகை பார்க்குஞ் சாஸ்திரி சொன்ன பலன் என என்பிள்ளை எழுதியதில் நம்பிக்கை வையாமல், எங்கள புரோகிதரைக்கூப்பிட்டுச் சாதகக் குறிப்பைக் கொடுத்துப் பார்ப்பித்தபோது அவரும் அந்தக் குறிக்கப்பட்ட காலத்திலேயே பிள்ளைக்குப் பொல்லாத காலம் என்று சொன்னாரே; அதை நினைக்க நினைக்க எனக்குக் கவலையதிகப்படுகிறது...." என்று சண்பகத்தம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும்போது, புவனேசுவரியும், காஞ்சனமாலையும் அவர்கள் மூவரும் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். இவர்கள் வரவைக்கண்ட சின்னம்மாளும் சண்பகத்தம்மாளும் தாங்கள் கொண்ட கவலையை மறைக்க முயன்றார்கள். கந்தசாமி தன் கவலையையும் தான் கையில் வைத்திருந்த கடிதத்தையும் மறைக்க முயன்றான். இவர்கள் இப்படி மறைக்க முயல்வதற்கிடையில் அங்கே வந்த கன்னியர் இருவரும் இவர்கள் கொண்டுள்ள கவலையை அவதானித்துக்கொண்டார்கள். உற்ற கவலையை அற்ப நேரத்துள் மறைத்துவிட முடியுமா? முடியாது.

### ஏன் கவலைப்படுகிறீர்கள்?

"அம்மா, ஆச்சி, ஏன் கவலைப் படுகிறீர்கள்? எங்களுக்குச் சொல்லவொண்ணாதா" என்று ஆவலுடன் கேட்டாள் காஞ்சனம்; புவனேசுவரியும் கவலைக்குக் காரணமென்னவென்பதை அறிதற்கு ஆவல்கொண்டு நின்றாள். தாய்மார் இருவரும பதில்சொல்லப் பயந்தனர். "அம்மா, எங்களைப் புறக்கணிக்கின்றீர்களோ" என்று துயரத்தோடு வினவினாள் காஞ்சனம். "மக்காள்! உங்களைப நாங்கள் புறக்கணிப்பது; அப்படியொரு பிழையுமில்லை; கவலையின் காரணத்தைச் சொன்னால், நீங்கள் மனச் சஞ்சலப்படுவீர்களென்று பயந்து தான் சொல்லப் பின்னிற்கிறோம்..." என்று சண்பகத்தம்மாள் சொல்வதற்கிடையில் "உது யாருடைய கடிதம், என் அண்ணாவின் கடிதமா? உதை நான் பார்க்கக் கூடாதா" என்று மனக்கலக்கத்துடன் காஞ்சனந் தாயைக்கேட்க, "ஓம் மகளே, உன் அண்ணாவின் கடிதந்தான்; நீ பாராமல் வேறு யார் பார்ப்பது" என்று தாய் பதில் சொல்லும்போது, கந்தசாமி கடிதத்தைச் சண்பகத்தம்மாளிடங் கொடுக்க, அவள் அதனைவாங்கி மகளிடங் கொடுக்க, மகள் அக்கடிதத்தை வாங்கிப் புவனத்தையுங் கூட்டிக்கொண்டு புவனேசுவரி இருக்கும் அறைக்குட் சென்றாள்; "இந்தக் கருமத்தை எங்கள் பிள்ளைகளுக்கு மறைத்து வைப்பதுஞ் சரியல்ல" என்று சின்னம்மாள் சொல்ல, "ஓம் அக்கா" என்றாள் சண்பகத்தம்மாள். அறையுட் சென்ற இருவரும் ஒருங்கு இருந்த பின் காஞ்சனம் கடிதத்தைப் படிக்க, புவனம் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்; படித்தவளும் கேட்டவளும் பெரிதுந் துயருற்றனர்; "தங்கைச்சி இன்னுமொருமுறை படியும்" என்று புவனம் கேட்ட, காஞ்சனம் "நீங்கள் தான் படித்துப் பாருங்கள்" என்று கடிதத்தை அவள் கையில்நீட்ட, அவள் வாங்கிப்படித்தாள். அக்கடிதத்தில் எழுதப்பட்ட சில வசனங்கள் புவனத்தின் உள்ளத்தை உருக்கின.

"மேலும் நீங்கள் மணஞ்செய்து வைக்க விரும்பிய பெண்ணும் பெண்பகுதியாரும் எங்களுக்குப் புதியவர்களல்லர்; அவர்கள் உயர்குடியிற் பிறந்தவர்கள்; உத்தமமான குணத்தோடு கூடியவர்கள்; பெண்ணின் பேரழகையும் அருமையான குணத்தையும் எங்கள் குடும்பத்திற் பாராட்டிவரும் அன்பு விசுவாசம் என்னுமிவைகளையும் கல்வியறிவையும்பற்றி எனது அருமையான தங்கை காஞ்சனம் பலமுறை சொல்லக் கேட்டிருக்கிறேன்; அப்படியான ஒரு சிறந்தபெண் எங்கள் வீட்டிற் புகுந்தால் அது நாங்கள்செய்த புண்ணியத்தின் பயனாகுமென் றெண்ணலாம்; மணஞ்செய்தால் அப்படிப்பட்ட பெண்ணையே மணஞ்செய்தல் வேண்டும்; இல்லையேல் நித்திய பிரமசாரியாயிருத்தல் நல்லதென்று நினைக்கிறேன்......"

என்ற இந்தப் பாகத்தைப் புவனேசுவரி காஞ்சனத்தின் காதிலும் படத்தக்கதாய் இரண்டாம் முறையும் வாசித்து "தங்கைச்சி, இக்கடிதத்திலே காட்டப்பட்ட பெண் ஆர் என்று எனக்குச் சொல்லவொண்ணாதா" என அறியாள்போல் வினவினாள்; வினவுதலும் காஞ்சனம் தான்கொண்ட கவலையையும் மறந்து அன்பு பெருகப் புவனத்தைத் தன் இருகரங்களினாலும் அணைத்துக் கட்டிப்பிடித்துக்கொண்டு "வேறு எந்தப் பெண் அக்கா, அந்தப் பெண் நீங்கள் தான்" என்று உள்ளமுருகச் சொன்னாள். நகுலமும் காஞ்சனத்தின் கரங்களை விடுவித்துத் தான் அவளைச்சேர்த்து அணைத்து முதுகைத்தடவி "என் அருமையான தங்காய் என்னில் உமக்கு இவ்வளவு அதிகமான அபிமானமா? நீரும், உம்முடைய சொல்லை நம்பி உமது தமையனாரும் நினைத்திருக்கும் குணம நடையொன்றும் என்னிடத்திலில்லையே, உங்கள் குடும

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை விநோதங்கள்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

## (தாவரம்)

தாவர வடிவங்களில் அமைந்துள்ள தோற்றமும் சிறப்பும், விநோதமும், ஆங்காங்கு அளவிறந்து காணப்படும் கிரமவரிசைகளும் அவற்றால் மிருகங்களுக்கும் மிருகங்களால் அவற்றிற்கும் பெரும் பயனுண்டாகும் மரபும் அவற்றிற்கு ஆதாரம் மண்ணையாகவும் அம்மண்ணினின்று தமக்கு வேண்டிய ஆகாரத்தைக் கவரவல்ல கை கால் முதலிய உறுப்புகள் மிருகங்களுக்கு இருப்பதுபோல் அவற்றிற்கு இல்லாதிருப்பவும் அங்ஙனம் கவர்தற்கியைந்த வேர்கள் அவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருத்தலும் உற்று நோக்கத்தக்கன.

மண்ணிலுள்ள சத்தைக் கவர்தற்குரிய அதிநூதன ஆற்றல் அவ்வேர்களிலே அமைந்துள்ள அதிசயமும் அவ்வாற்றல் தாவரங்களின் பிற பாகங்களில்லாமல் வேர்களில் மாத்திரமே காணப்படும் மரபும் இவ்வேர்கள் கூரிய அஸ்திரம்போன்று மண்ணைப் பிளந்து ஊடறுத்துச் செல்லும் வன்மையும் இவைகள் தாம் செல்லும் வழியிலே கல் முதலிய தடைகள் எதிர்ப்படுமிடத்து அத்தடைகளை விலக்கி அப்பாற் செல்லும் இயல்பும், தாவரங்களின் பிறபாகங்கள் புண்ணிற்பட்ட வழிக் கெட்டொழியவும் இவ்வேர்கள் அங்ஙனமின்றிச் செழிப்புற்றோங்கும் முறையும், இங்ஙனமாயதோர் இலக்கணம் வேர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுமாறும் இவ்வேர்கள் இங்ஙனம் கவர்ந்து கொடுக்குஞ் சத்தினை மரத்தின் உடம்பெங்கணும் ஆங்காங்குச் செலுத்த வல்லதோர் ஆற்றல் அம்மரத்தில் அமைந்துள்ளவாறும் பெரிதும் வியக்கத்தக்கன.

இம் மரங்கள் ஆங்காங்குப் பெறும் ஆகாரத்தைத் தத்தமக்கியைந்த சத்தாகத் திரித்துக் கொள்ளும் அப்பெரு வித்தையும் அந்தச் சத்தினும் மரத்துக்கு வேண்டுவன மரத்துக்கும் பட்டைக்கு வேண்டுவன பட்டைக்கும் இலைக்கு வேண்டுவன இலைக்கும், காய்க்கு வேண்டுவன காய்க்குமாக இங்ஙனமே வரன்முறை பிறழாது தக்க தக்க கணித அளவைப்படி செலுத்தப்படும் நியதியும், இவ்விலை பூவாதிகள் முதிர்வடைந்த விடத்து அந்தச் சத்து அவற்றுக்குச் செல்லாது இளங்காய் இலைகளை நாடிச்செல்லும் மரபும், இனி ஒருபடித்தாகிய ஆகாரந்தானே மரங்கள்தோறும் வேற்றுவேற்றியல்பினவாகிய வேற்றுவேற்றிரச குணங்களாய்த் திரியும் முறையும், இங்ஙனமாய்த் திரித்துக் கொள்ளுதல் நம்மனோர் புத்திக்கும் சாமர்த்தியத்துக்கும் அதீதமாகிய தோர் பெருநூதனமாயக் கிடக்குமாறும், தெய்வகம்மியரால் சமைக்கப்பெற்ற சித்திர மண்டபங்கள் போல, இவற்றின் கொப்பு, இலை, பூ முதலாயினவெல்லாம் நரம்புபோன்ற மெல்லிய அரும்பாதியவற்றால் நிரைக்கப்பெற்று, சத்தாவேயப்பெற்று, அதி விசித்திர மாடகூடங்களை ஒத்த பற்பல பகுப்புகளைக் கொண்டு, எத்துணை சிறந்த பொன்வினை மாக்களும் நினைத்தற்கரிய பேரவிசித்திர விநோதங்களும் வர்ணங்களும் புனையப் பெற்றுக் கிடக்கும் காட்சியும், இந்தத் தாவரங்கள் உலகத்தில் பலவப் பெருகி நிலைபெறுமாறு இவற்றின் பிரமாண்ட உருவ காரணங்களையெல்லாம் நுண்ணிதினும் நுண்ணிதாகத் தம்பால் கொண்டுள்ள வித்துக்கள் இவற்றின்கண் தோன்றும் அதிசயமும் கண்டு மகிழ்தற்பாலன.

இவ்வித்துக்களிலிருந்து அவ்வத் தாவரம் அதிநூதன சாலவித்தைகள் தம்மினும் மிக நூதனமாய்த் தோன்றும் சிறப்பும், இந்த வித்துகள் பழுதடையாமைப்பொருட்டு அவையெல்லாம் தத்தமக்கேற்ற காப்புகளினாலே காவல் செய்யப்பட்டிருக்கும் நெறியும், இத்தக்காப்புகளாகிய உறைகளினாலே அவ்வத் தோற்றங்கள் முளை கொண்டு வெளித்தோற்றுதற்கியைந்ததோர் மிருதுவாகிய பாகம் அமைந்திருக்கும் வியப்பும், அத்தோற்றங்கள் அங்ஙனம் தோன்றி வேர்விடுத்து மண்ணினின்று ஆகாரத்தை உறிஞ்சுதற்கமைந்த பக்குவத்தை அடையுங்காறும், அவ்வவற்றைப் போஷித்துக் காத்தற்கமைந்த பதார்த்தங்கள் அவ்வித்துகளிற்றானே அமைக்கப்பட்டிருக்கும் அதிசயமும், இனித் தாவரங்கள் பல்கிப் பெருகுமாறு அவ்வவற்றின் வித்துகளைப் பிறப்பித்தற்கியைந்த ஆண்மரங்களும் பெண்மரங்களும் அமைந்திருக்கும் நூதனமும் ஆண்மரத்துள்ள ஆண்சத்தைப் பெண்மரங்களிலுள்ள பெண்சத்தோடு சேர்த்து அது அதற்கியைந்த வித்தைப் பிறப்பிக்கும் அப்பேர் இரகசியமும், ஆண்மரங்களில்லாத வர்க்கங்களில் ஆண்சத்தும் பெண் சத்தும் ஒரே மரத்திற்றானே அமைக்கப்பட்டிருக்கும் முறையும், பாராட்டத்தக்கன.

தாவரங்களின் இளங்காய் பூவாதிய மெல்லிய பாகங்கள் வெப்பம் முதலிய ஏதுக்களால் தீதுறுவண்ணம் அவை பாலைகளால் காக்கப்பட்டிருக்கும் இயல்பும், பூக்களின் கண்ணே அமைந்து கண்டார் பரிசித்தாரது இந்திரியங்களைக் கொள்ளை கொள்ளத்தக்க விசித்திர வர்ணங்கள் பரிமள கந்தங்கள் என்றுள்ள இவற்றின் பெருமையும், மிருதுவாகியதோர் வித்திலிருந்து இரும்பையும் கொக்கும் மாமரங்கள் பிறக்குமுறையும் இன்னும் விரித்துரைக்கின் பன்னூல் பிரபந்தங்களினும் அடங்காத அத்துணைப் பெரும் கிரம பிரயோசன நூதனங்கள் காட்சிக்குரியனவாம்.

[குகதாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய நூல்களிலிருந்து சிறசில மாற்றங்களுடன் பிரசுரிக்கப்படுவது.] (தொடரும்)


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல்வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஜ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்தியசாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவ்விடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5-8-31-12-43)


# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்

(முற்றொடர்)

"உலகத்திற்குக் காரணமாகிய பிரமம் யாது" என்பது முதலியனவாக முதன் மந்திரத்திலெழுந்த வினாக்களுக்கு விடை கூறவேண்டி முதலில் காலேச்சுரவாதி முதல் மாயாவாதி யிறுதியாயுள்ள சமயவாதிகள் தனித்தனி காரணமென்று கூறும் காலம் முதல் ஆன்மா இறுதியாகிய பொருட்கள் பிரமமாக மாட்டாவென இரண்டாம் மந்திரத்திற் காரணங்காட்டி மறுத்தோதுகின்றது. பின், பிரமம் உலகப்பொருட்கள் போல ஆராய்ச்சியறிவினால் அளந்தறிதற் கெட்டாதவர் என்பதையுட்கொண்டு, அவரைக் காண்டற்கு வழி கூறுதல் வாயிலாகத் திருவருட் சத்தியினுண்மை மூன்றாம் மந்திரத்திற் காட்டப்பட்டது. முதல்வன் செய்யும் ஐந்தொழிற்குத் திருவருள் வடிவாகிய அப்பராசத்தி துணைக்காரணம் என்பதை அடுத்துவரும் நாலாம் மந்திரம் சத்தியை ஓர் சக்கரமாக உருவகித்துக் காட்டுதல் வாயிலாக கன்கெடுத்து விளக்கிற்று. ஐந்தாவதாகிய மேல் மந்திரம்; அச்சத்தியினால் நிகழும் ஐந்தொழிற்கட்படுமுயிரை ஓர் நதிரூபமாக வர்ணித்து, அதனால் ஜீவ (உயிர்) தூல சித்தாய்ப் பரதந்திரப்படுமியல்புடையதென்றும்; அங்ஙனமாதலால் உலகத்திற்குக் காரணமாதல் பொருந்தாது என்றும் வலியுறுத்தி யுணர்த்தி மேல் உலகிற்குக் காரணமாகிய பிரமம்; கூறிப்போந்த சித்தும் சடமுமாகிய இருவகைப் பிரபஞ்சத்திற்கும் வேறானது என்பதும், அங்ஙனமறிதலால் விளையும் பயன் இது என்பதும் முதலியன வரும் மந்திரங்களில் உணர்த்தப்படுகின்றன.

(சூ) ஸர்வாஜீவே ஸர்வஸம்ஸ்தே<br>
ப்ருஹந்தே அஸ்மின்<br>
ஹம்ஸோ ப்ராம்யதே ப்ரஹ்ம<br>
சக்ரே।<br>
ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச<br>
மத்வா ஜுஷ்டஸ்<br>
ததஸ் தேநாம் ருதத்வமேதி॥

இ—ள்: ஸர்வாஜீவே - சித்தும் சடமுமாகிய இருவகைப் பிரபஞ்சத்திற்கும் நிலைக்களமாய் (ஆதாரமாய்) உள்ளதும், ஸர்வஸம்ஸ்தே எல்லாம் ஒடுங்குதற்கு இடமாயுள்ளதும், ப்ருஹந்தே-எல்லாவற்றினும் மேலானதுமாகிய, அஸ்மிந்ப்ரஹ்மசக்ரே-இந்தப் பிரம சக்கரத்தில, அம்ஸ:-அமிசஞான சீவான்மாவானவன் ப்ராம்யதே-சுழலுகின்றான், ஆத்மாநம்-அங்ஙனம் சுழலுகின்ற (ஐந்தொழிற்படும்) ஆன்மாவையும், ப்ரேரிதாரம் - செலுத்துபவரையும் (ஐந்தொழில் செய்யும் நிமித்த காரணராகிய சிவபெருமானையும், ப்ருதக்-வேறு என, மத்வா-அறிந்து, ததஸ்-பின், தேந-(செலுத்துகின்ற) அவரால், ஜுஷ்ட:-அருளப்பட்டவனாய், அமிர்தத்வம்—மோட்சத்தை (சிவமாந்தன்மைப் பெருவாழ்வை) ஏதி-அடைகின்றான்.

இம்மந்திரத்தின் குறிப்பு பின் வரும்.

# இன்ன இன்ன தோஷத்தால் புத்திரபாக்கியமில்லை என்பதற்குப்பிரமாணம்

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் சுதுமலை

"சலர்ப்ப விருச்சிக மார்ச்சார மண்டூகாதீநாம் பாலனும்" என்னும் வசனத்தை முதலாகக் கொண்ட சாந்திரத்நாகரம் என்னும் நூலிலகண்ட பிரமாணப்படி, பாம்பு, தேள், பூனை, தவளை முதலியவைகளையும், குழந்தைகளையும் கொல்லுதல், கர்ப்பங்களை யழித்தல் புத்திரின்மைக் கேதுவான தோஷங்களாம். பல புத்திரருள் ஒருவரிடத்து மாத்திரம் அன்பாய் நடத்தல் முதலியன காகமபோல் (காகவந்தியா) மலடாதற்குக் காரணமாம், நற்குணமுள்ள ஸ்திரீயைத் தூஷித்தலும் கெட்டகுணமுள்ள ஸ்திரீயைச் சன்மானித்தலும் முதலியன ஆண்பிறவாது பெண்பிள்ளைகள் மாத்திரம் (கன்யாமலடி) பிறக்கிற மலட்டுக்குக் காரணங்களாம்; வலாற்காரத்தால் சிறுவரை வருத்துதல், கருவைச்சிதைத்தல், பிராணிகளின் முட்டைகளை உடைத்தல், சூரிய சந்திர கிரகணகாலத்தில், அமாவாசை பூரணைகளில் சம்போகம், பிரதோஷ காலத்தில் சம்போகம் முதலியவை பிள்ளைகள் பிறந்து பிறந்து இறத்தலாகியவை மலட்டுக்குக் காரணங்களாம் பலபுத்திரரையுடைய மனைவியின்மேல் வேறொரு முதன்மனைவி பொறாமையுறுதல், காமாதிகத்தினால் வசியமருந்து முதலியவற்றால் கணவனை வசமாக்கல், சிறுபிள்ளைகளுடன் கொடுஞ்சொற் பேசல் பிறர் புதைத்துவைத்த பொருள்களைக் களவெடுத்தல், நம்பிக்கைப் பொருள்களை அபகரித்தல், மாமன், மாமி, கணவன், தெய்வம் முதலியவர்களில் அன்பில்லாமை, விலக்கப்பட்ட சுரைக்காய் முதலியவற்றையும் இலைக்கறி முதலியவைகளையும் புசித்தல், வேறொருமனைவியின் சம்போகத்தைக் குழப்புதல், பொறாமை, பந்தியைக் குழப்புதல், யாசகர்களுக்கு அடிப்பிடித்த கருகிய வெறுஞ்சோற்றைக் கொடுத்தல், ஒருவன் மனைவியுடன் சம்போகஞ் செய்யும்போது அவர்களறியாதபடி ஒட்டிப்பார்த்துப் பரிகாசஞ் செய்தல்; தீட்டாயிருக்கும் பொழுதும், தேவாலயத்திலும் புண்ணிய தீர்த்தக்கரையிலும், போசனஞ்செய்து குறையாயிருக்கும்போது சம்போகம் முதலியவை சென்ம மலடாயிருத்தற்குக் காரணங்களாம்; சிவத்துரோகம், விஷ்ணுத்துரோகம், குருத்துரோகம், பிராமணத் துரோகம், பசுபட்சி முதலியவற்றிற்குச் செய்யும் துரோகம், பொன்னைத் திருடல், தேவிகோபம், கிராமதேவதையின் கோபம், குலதெய்வகோபம், பூமரம், பழமரம், அரசமரம், வில்வமரம் என்பவைகளைத் தறித்தல் சென்மலக்கினத்தாலும் சந்திரலக்கினத்தாலும் காரகலக்கினத்தாலும் புத்திராதிபனிருந்த லக்கினத்தினாலும், புத்திரஸ்தானத்திலும், ஆரூட லக்கினத்திலும் ஆரூட லக்கினாதிபரைப்பற்றியும், பாபக்கிரகம், சத்துருக்கிரகம், நீசக்கிரகம், அஸ்தமித்த கிரகம், தோல்வியடைந்த கிரகம், கூடுகை பார்வை முதலியவற்றால் உண்டான குற்றங்களும், நட்சத்திரத்தைப் பற்றியும், சர்வதோபத்திர சக்கரத்தைப் பற்றியும், நைசர்க்கிக பலாபலத்தைப் பற்றியும், காலந்தோறும் நிகழும் புத்திர உற்பத்திக்குத் தடையான ஏதுக்களும் புத்திரதோஷத்திற்குக் காரணங்களாம்.

## வட இலங்கை முத்தமிழ் மன்றம்

இயல், இசை, நாடகம் என்னும் முப்பாற் றமிழையும் இயன்றவரை புத்துயிரளித்து வளர்ப்பதே இம்மன்றத்தின் பேரிலக்காகும். இயற்றமிழ் வளர்ச்சியைக் கலாநிலையத்துடன் சேர்ந்தும் மற்றிரு தமிழையுஞ் சேர்ந்தும் தனித்தும் வளர்ப்பது குறியாக நிலைய மண்டபத்தில் இரு பொதுக்கூட்டங்கள் கூடின. 12-9-43 ஞாயிறுவாரத்திற்கூடிய கூட்டத்தில் காரியாதிகளைத் தெரிவதற்கும் மன்ற ஆக்கம்சம்பந்தமான இதர நடபடிக்கைகளைச்செய்வதற்கும்1-10-43 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணியளவில் கலாநிலைய மண்டபத்தில் ஒரு மகாசபை கூடுவதாக நிச்சயிக்கப்பட்டது. முத்தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுடையார் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

முத்தமிழறிஞரும் தமிழிசையில் ஒப்பற்ற ஆராய்ச்சிகளைச் செய்து வருபவ

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலத் தமிழ் இலக்கியம் - கவிதை

(ந. சோ. நடராஜன்)

ஐரோப்பிய நாகரிகத்தின் அதிர்ச்சியினாலும் ஆங்கிலக் கல்வியின் பயனாகவும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி துவங்கியே தமிழிலக்கியத்திற் சிறிது சிறிதாகப் பலபல புதிய மாற்றங்கள் உண்டாயின. தமிழிலக்கியத்தின் பழைய பாரம்பரை முற்றாக மாறிவிட்டாலும் பழையன கழித்துப் புதியன புகுத்தும் வேலை தொடர்ந்து நடந்தே வந்தது.

பழைய தமிழிலக்கிய இலக்கண நூற்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து மீட்டுப் புத்தக ரூபமாக அச்சடிப்பதில் சிறுப்பிட்டி தாமோதரம்பிள்ளை நல்லூர் ஆறுமுகநாவலர், உ. வே. சாமிநாதையர் முதலிய பேரோபகாரிகள் முயன்றார்கள். புதிய தமிழாராய்ச்சிகள் நடைபெறாவிட்டாலும், தமிழைப்பற்றியும், தமிழர் சரித்திரம், காலஆராய்ச்சி முதலியவற்றைப்பற்றியும் ஆங்கில அறிவு படைத்த பல அறிஞர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலுமாகப் பலவகையான ஆராய்ச்சிகளை நடத்தினர்கள். தற்கால முறைகளையனுசரித்த இலக்கிய ஆராய்ச்சிகள் அதிகமில்லாத போதிலும் இலக்கிய சம்பந்தமான ஆராய்ச்சிகளும், சரித்திர சாசனக் குறிப்புகளும, அவ்வப்போது எழுதப்பட்டன. இலக்கியத்தின் மூலாதாரமான தத்துவங்களையும், நியதிகளையும், ஏனைய இந்திய இலக்கியங்களுடனும் மேல் நாட்டு இலக்கியங்களுடனும் ஒப்பு நோக்கித தமிழின் நயங்களையும் தாரதம்மியங்களையும் ஆராயும்முறை தமிழ்நாட்டில் இன்னும் எழவில்லை. இக்கால நூல்களைப்பற்றிப் பத்திரிகைகளில வரும் விமரிசனங்களும் ஆராய்ச்சிகளும் ஆழமற்றவை. மேலெழுந்தவாரியானவை. பாரத இலக்கிய அறிவினால மலரும் மதிப்பு இல்லாதவை. பல புதினம் எழுதும் பத்திரிகைப் பேனாஓட்டிகளின் எழுத்துக்களுக்கு இலக்கானவை, மேனாட்டு நாகரிகததாலும் கலைகளின் தாக்குதலாலும் அரசியற் போக்கினாலும் மோதுண்ட நமது சமுதாயத்தில் புதிய சக்திகள் தோன்றியே வந்தன. மக்களின் எண்ணங்களும், இலட்சியங்களும், வாழ்க்கை நியதியும் மாறுதலடைந்தன. இவைகளைப் பொருளாகக்கொண்ட இலக்கிய சிருட்டிகள் தற்காலப் பண்பைப் பெற்றிருக்கின்றன. சிறுகதை, நாவல், நாடகம் முதலிய துறையில தமிழ் இக்காலப பண்பைப் பெற்றதுபோலவே கவிததுறையிலும் புதுமையைக் கொஞ்சங் கொஞ்சமாய் மலர்ந்துகொண்டே வந்தது. இந்தவகையிற் தமிழ்க்கவிதா மண்டலம் எந்நிலையிலிருக்கிறதென்பதைச் சிறிது ஆராயலாம்.

பழைய இலக்கிய சம்பிரதாயத்தையே பெரிதும் பின்பற்றியுள்ள பல புலவர்கள நம்மிடையுண்டு. அதுபோலவே பழைய சாடியிற் புதிய மதுவைஊற்றி ரசிக்கச்செய்யும் புலவர்களும பலர் விளங்குகிறார்கள்.

பழைய இலக்கிய முறையை முற்றாக அனுசரித்த போதிலும புதிய சில முறைகளைத் தமது ஆற்றலுக்கு ஏறறவாறு புகுத்திய புலவாகளுள நாலைந்துபேரை ஈண்டுக்குறிப்பிடலாம். அவர்களுள் சென்ற நூற்றாண்டினிறுதியில் இசை பெற்று விளங்கிய சுந்தரம்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, வேதநாயகம பிள்ளை, வி. கோ. சூரியநாராயண சாஸதிரி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இப்பொழுது இருப்பவர்களுள் "பாரிகதை" முதலிய பாட்டுகளை எழுதிய ரா. இராகவஐயங்காரையும், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், மாவை நவநீதகிருஷ்ண பாரதியார், சுவாமி விபுலானந்தர் ஆகியோரையுங் குறிப்பிடலாம்.

திருவாங்கூர் மகாராஜாவின் கலாசாலையில் தத்துவ நூலாசிரியராகவிருந்து காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை 50 வருடங்களுக்குமுன் மனோன்மணீயமென்ற ஓர் அரிய தமிழ் நாடகத்தை 50 வருடங்களுக்கு முன் எழுதி வெளியிட்டார்.

ஒவ்வொரு சந்ததியாரும் சிறிதாகவோ, பெரிதாகவோ தத்தமக்கியன்றளவில் புது நூல்களை எழுதி வெளியிட்டுச் செல்லவேண்டுமெனச் சுந்தரம்பிள்ளை எண்ணினர். அவர் தமது மனோன்மணீய முகவுரையில் "அருமையாகிய பூர்வநூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற்கடமையோடு அப்படியே முயன்று அந்தந்தக் காலநிலைக்கேற்றவாறு புதுநூல்களை இயற்ற முயலுதல் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் உரித்தான இரண்டாங் கடமையாய் ஏற்படுகிற"தென்று கூறியுள்ளார்.

இந்தக் காரணத்தினால் அவர் மனோன்மணீய நாடகத்தை எழுதினார். "மனோன்மணீயம்" நாடக ரூபத்தையுடைய உயரிய காவியம். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகா கவியைப் பின்பற்றி எழுதப்பட்டது. ஷேக்ஸ்பியர் தமது நாடகங்களை Blank Verse என்ற அகவற்பாவில எழுதியதுபோலவே சுந்தரம்பிள்ளையும் மனோன்மணீயததை அகவலில் யாத்திருக்கிறார். அரங்க மேடையில் நடிப்பதற்கு ஏது ஏற்றதல்ல; ஆனால், படித்தின் இன்புறுந்தன்மையுடையது. அக்காலததிருந்த பண்டிதரிடையே இது பெருமதிப்பைப்பெற்று இன்றுவரை புகழ் குன்றாமல் விளங்கி வருகின்றது. சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த நல்ல இலக்கியம். கதை ஆங்கில ஆசிரியராகிய லிட்டன் பிரபு எழுதிய Secret way என்பதைத் தழுவியது. புதிய கருத்துக்கள் அநேகம் உண்டு. ஆனால், நடையும் கவிப்போக்கும் பழைய இலக்கிய சம்பிரதாயத்தையே அனுசரித்திருக்கிறது. இதிற் கூறப்படும் தமிழ்த்தெய்வ வணக்கம் புதியதொருபாணியில் அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

"பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினு மோர்
எல்லையறு பரம்பொருள்
முன்னிருந்தபடி யிருப்பதுபோல
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலக வழக்கழிந்
தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

இவ்வரிகளிற் புதிய பாணியும பழைய சம்பிரதாயக் கவிதைப் போக்கும், சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி தொட்டுத தமிழ்நாட்டில் உண்டாகிவந்த தமிழ் மறுமலர்ச்சி உதயமுந் தெளிவாகிறது.

அருள் உணர்ச்சியால் பொங்கி எழுமகவிச்சுவையையும் இசைததிறத்தையும 'சிவகாமி சரிதம்' போன்ற சிறுசில பாகங்களிற்றான காணலாம். சுந்தரம்பிள்ளை பழைய வாழ்விற்கும் புதிய சகதிகளுக்கும இடையிடையே நிற்கிறாரென்றே கூறலாம்.

மனோன்மணீய ஆசிரியரை நேரடியாகப் பின்பற்றி அவ்வுண்ட இலக்கிய வரிசையில் இருப்பவருள் ஒருவர் சுந்தரம்பிள்ளை. அவர்தான் சைவசித்தாந்த சாஸ்திரத்தை 'அலெகரி' என்று ஆங்கிலத்திற் கூறும் முறையில் நாடக ரூபமாக "உயிரிளங்குமரன்" என்ற பெயருடன் எழுதி உதவிய யாழ்ப்பாணத்து நவாலியூர்ச்சோமசுந்தரப் புலவர்.

இந்நாடகத்தில் தீண்டாமை, காந்தீயம், முதலிய பல புதிய கருத்துக்களும், இயக்கங்களும் வந்து கலந்து விட்டன. சைவசித்தாந்த யாழ்ப்பாணத்துக்கு ஒரு "பனியன" போன்றவரென ஒரு அறிஞர் இவருடைய நாடகத்தைப் பற்றிக் கூறிப்போந்தார். இவருடைய பல நூலகள் ஸ்தோததிர ரூபமாயமைந்தவை. இக்காலப் பண்பையுடைய சிலபல நயமான பாட்டுக்களையும பாடியிருக்கிறார்.

மாவை நவநீதகிருஷ்ண பாரதியாரின் "உலகியல் விளக்கம" பழைய இலக்கிய பரம்பரையைச் சேர்ந்தது. சுவாமி விபுலானந்தர் ரவீந்திரநாத்தாகூர் பாடிய "பூஞ்சோலைக் காவலன்" என்ற நூலிலிருந்து சில பாடலகளைப் பழைய இலக்கியப் போக்கிற் பாடியிருக்கிறார். சிறிது நாட்களுக்கு முன காலஞ் சென்ற 'குரு கவி' மகாலிங்க சிவம் ஒரு இயற்கைப் புலவர். நயமான பாட்டுக்களைப் பாடியிருக்கிறார்.

தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்கள தமிழிலக்கியத்துக்கு அளித்தகவி, கிருஷ்ணபிள்ளை. இவர் வைஷ்ணவராய்ப் பாளையங் கோட்டையிற் பிறந்து பின்னர், கிறிஸ்தவராய் மாறினார். தமது சிறந்த கல்வியையும், புலமையையும் மத சேவையிற் செலவு செய்தார். ஆங்கிலப் புலவர் 'பனியன்' எழுதிய Pilgrims Progress" என்ற நூலை 'இரட்சணிய யாத்திரிகம்' என ஒரு காப்பியமாய்ச் செய்தார். இதில் 4000 செய்யுட்கள உண்டு. இவர் பல இடங்களிற் கம்பனின கவிதைத்தையும் வண்ணங்களையும் தேவாரங்களின் இசைப் பெருக்கையும், பத்திரசத்தையும் கையாள முயன்றிருக்கின்றார்.

இவர் பாடிய ஒரு திருத்தாண்டகம பின்வருமாறு:

"அருள்பழுத்த திருமுக
மண்டிலத்தி னானை
அளிநிறைந்த கமலலோசனத்
தெம்மானை
தெருள்பழுத்த ஜீவமொழி
கனிவாயானைச்
செம்மவிடாய் தணித்தருள்
சீர்பாதத்தானை
இருள்பழுத்த நகரடைத்த
எமபிரானை
என்று கொலோ கண் குளிரக்
காணு நாளே"

மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் சமரசக் கீர்த்தனைகள் இசையும் பக்தியும் மலிந்தன. தமிழிசை இயக்கத்தின் பயனாக இவர் பாடல்கள் அதிகமாக வித்வான்கள் வாயில் இப்பொழுது கேட்கப்படுகின்றன. சூரிய நாராயண சாஸ்திரியாரின 'பாவலர் விருந்தும்' தனிப் பாசுரத தொகையும ஆக்காலத்தில் டாக்டர், போப்பின் மதிப்பைப் பெற்றன.

சுப்பிரமணிய முதலியார் 'கோம் பிவிருத்தம்' 'அகலிகை வெண்பா' என்ற நூல்களையும், Paradise lost என்ற ஆங்கில நூலைத் தழுவிச் 'சுவர்க்க நீக்கம்' என்ற செய்யுளையும் இயற்றினார்.

இவர்களெல்லாரும் பழைய இலக்கிய சம்பிரதாயத்தைப் பின் பற்றுவோர்.

சுப்பிரமணிய பாரதியுடன் தமிழ்க்கவிதை மறுமலர்ச்சியின்உச்சியை அடைகிறது. புதிய போக்கில் திடமாகத் திரும்பி விடுகிறது. தமிழை முறையாகப் படித்த பாண்டித்தியம் பாரதிக்கு இல்லாவிட்டாலும், அருட் புலமை அவரிடத் துண்டு. அவருடைய பாட்டுக்களிற் தமிழ்ப் பண்பு சொட்டுகிறது.

பாரதியின் கவிதை தேசிய கீதங்களாயும் ஸ்தோத்திரங்களாயும் கற்பனைச் சித்திரங்களாயும், காவியங்களாயும் பலமுகங் கொண்டு ஊற்றெடுத்துப் பாய்கிறது. காந்தீயமும் ரவீந்திரநாத் தாகூரின் புலநெறியும் பாரதி காலத்தில் பெருக்கெடுத்து நாடெங்கும் பரவின. தேசிய உணர்ச்சிக் கொழுந்து விட்டெரிந்தது. பாரத நாட்டின் பண்டைப் பெருமை தமிழ், நாட்டின் பழம் புகழ், தற்காலநிலை இவற்றையெல்லாம் எண்ணுகிறார் பாரதியார். பாட்டின் மூலம் பெருமை கொள்ளுகிறார். வீர ஆவேசமடைகிறார், பிரலாபிக்கிறார்; இவ்வளவும் இசை கலந்த இனிய தீந்தமிழ்ப் பாட்டுக்களால் இலேசான பாஷையில் இலேசான யாப்பில் அமைந்திருக்கின்றன. சித்தர்களின் போக்கைச் சில பாட்டுகளிற் காணலாம். நம் பழைய பக்தர்களின போக்கைச் சில பாட்டுக்கள் கொண்டிருக்கின்றன. ஒரு பாட்டு:—

"புள்ளின மார்த்தன ஆர்த்தன
முரசம
பொங்கிய தெங்குஞ் சுதந்தர
நாதம்
வெள்ளியசங்கம் முழங்கின
கேளாய்
வீதியெலா மணுகுற்றனர்
மாதர்
தெள்ளிய வந்தணர் வேதமு
கின்றன்
சீர்தநிரு நாமமுமோதி
நிற்கின்றார்
அள்ளிய தெள்ளமு தன்னை
யெம்மன்னை
ஆருயி ரேபள்ளி
யெழுந்தருளாயே"

பாரத தேசத்தைப் பாடியது போலவே அளவில்லாத பக்தி யுடனும், ஆர்வத்துடனும், கண்ணன், முருகனை, காளி, சரஸ்வதி முதலிய தெய்வங்களைப் பற்றி விதம் விதமாகப் பாடுகிறார். கண்ணன் பாட்டு அருட்சுவையும் கவிப் பண்பும் நிறைந்தது. குயில் பாட்டு அழகான சித்திரங்களை யுடைய கற்பனைக் களஞ்சியம்; பாஞ்சாலி சபதம் பழையகதை; புதிய காவியம். எளிய சொற்கள்; எளியநடை; எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம். இரண்டொரு வருஷத்து நூற்பழக்க முள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி காவியத்துக் குள்ள நயங்கள் மலிந்து விளங்குகின்றன. இதுவே தற்காலக் கவிதையின் பண்பு.

பாரதி ஒரு புதிய இலக்கிய பாரம்பரையைத் துவக்கி யிருக்கிறார். அது செழித்தோங்கி வருகிறது. அந்தப் பாரம்பரையில் வந்த கவிதான் நமது தேசிகவிநாயகம்பிள்ளை. இவருடைய பாடல்கள் பல ஆங்கில முதல் நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்ட போதிலும் தமிழ்ப் பண்புடையவை. அதற்கு 'மலரும் மாலையும்' என்ற தொகுதி சிறந்த உதாரணமாகும்.

பாரதி தாசனென்கிற சுப்புரத்தினமும் இப் பாரம்பரையைச் சேர்ந்தவரே. சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவிபாரதிதாசன். "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" என்ற பாட்டில வெறி கொண்ட மனவெழுச்சியையும் ஆவேசத்தையும் காண்கிறோம். பாட்டுக்களில் நல்ல ஹாசிய சுவை மிளிர்கின்றது.

சுப்பிரமணிய பாரதி புதுமைக் கவிதான். தற்காலக் கவியுங்கூடப் புரட்சிக்கவி யென்றுங் கூறலாம். பழைய புலவர்கள் கையாண்ட முறைகளை உதறித் தள்ளிப் புதிய கட்டுக் கோப்புக்களை ஏற்படுத்

தொடர்ச்சி ௬-ம பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பத்தோடு சேர்ந்து நானும் பயின்று வருகிறபடியால், தாமரையிலையைச் சேர்ந்த நீர்த்துளியும் முத்தினொளியை அடையுமென்ற விதமாக, ஏதுஞ்சில நல்ல குணம் நடை இப்பொழுது என்னிடத்தில் வந்திருக்கக்கூடும். ஆனால், என்னிடத்தில் இல்லாததை உள்ளதாகச் சொல்லி உமது தமையனாரை ஏமாறச்செய்வது சரியல்ல'' என்று அன்புமேலீட்டினால் உள்ளமுருகக் கண்ணீர் பெருகச் சொன்னாள். "என் அருமையான அக்கா, சும்மா இருங்கள்; அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் உனதருளுக்கு அஞ்சினேனே, என்று வீமன் தருமபுத்திரருக்குச் சொன்னபிரகாரம் நான் உங்கள் விஷயத்திற் சொல்லவேண்டியிருக்கிறது; அண்ணா எழுதிய இக்கடிதத்தைப் படித்துப் புண்பட்டிருக்கும் என் உள்ளத்தைத் தேற்றுவது உங்கள் கடமையாகவிருக்க, நீங்கள் அதற்கு நேர்விரோதமாக உங்கள் அன்பான வார்த்தைகளால இன்னமும் அதிகமாகவல்லவோ என் மனத்தைக் கரைக்கிறீர்கள், அக்கா" என்று சொல்லிக் கலங்கினாள் காஞ்சனம்.

### "மனத்தினால் மணந்து கொண்டார்"

அப்படிக் கலங்கிய காஞ்சனத்தின் கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்து அவளைத் தேற்றி "என் அருமைக்கண்மணியே, காஞ்சனா, நீர் கவலைப்படாதீர்; உம்முடைய அருமையான தமையனாருடைய அன்பான கடிதத்தை நானும் இந்தச் சமயத்திற் பார்க்க நேர்ந்தது நான் செய்த புண்ணியமென்று எண்ணுகிறேன்; உமக்கு நான் எதனையும் ஒளிக்கவொண்ணாது; அப்படியொளித்தாற் பெருந் துரோகியாவேன்; உமது தமையனார் என்னைத் தம் தூயஉள்ளத்தினால் மணந்துகொண்டாரென்பது அவர் எழுதிய இக்கடிதத்தினால் நன்கு விளங்குகின்றது. அவர் அப்படியெண்ணிய பொழுது நானும் அப்படியெண்ணாமலிருத்தல் முடியாது; "மணஞ்செய்தால் அப்படிப்பட்ட பெண்ணையே மணஞ்செய்தல் வேண்டும். இல்லையேல் நித்திய பிரமசாரியாயிருத்தல் நல்லதென்று நினைக்கிறேன்'' என அவர் எழுதுகிறார்; என் அருமையான தங்காய், அப்படியே நானுஞ் செய்வேன். ஆனதால் அவைகளையிட்டு இப்பொழுது ஒரு விவகாரமுமில்லை; உங்கள் தமையனாருடைய ஆயுளையிட்டு நாங்கள் எவரும் படப்படவேண்டியதில்லை; கவலைப்படவேண்டியதில்லை; யமனுக்குப் பயந்து தம்மிடத்தில் அடைக்கலம் புகுந்த மார்க்கண்டேயர் பொருட்டு அந்த யமனையுதைத்து அந்த மார்ககண்டேயருக்கு என்றும் பதினாறு வயசளித்த விசுவநாதப்பெருமான், திருமருகலென்னுந் தலத்திலே வந்தடைந்த வணிகன பாம்பு தீண்டி மாண்டொழிய, தன் மைத்துனனாகிய அவ்வணிகனைத் தனக்கு வரனென மனதில் நிச்சயித்துக்கொண்டு பெற்றார் உற்றார் உணராதபடி அவனைத் தொடர்ந்து வந்த கன்னிகை தன் காதலனுக்கு நேர்ந்த கதியைககண்டு, அம்பேறுண்ட மயில்போல விழுந்து கிடந்து அரற்ற, அவளுடைய பரிதாப நிலையைக்கண்டு ஆங்கே எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார பாடிய தேவாரத்தைக்கேட்டுத் திருவுளம் இரங்கி அவ்வணிகனுயிரை மீட்டு அக்கன்னிகையின் சோகத்தைத் தீர்த்தருளிய திருமருகற்பெமான், தங்காய் காஞ்சனம் உமது அரிய தமையனாரையும் என்னையுமா புறக்கணிக்கப் போகிறார்? நாங்களும் அந்தப் பெருமானுடைய பிள்ளைகள்தாமே; சாவித்திரியின் வேண்டுதலுக்குத் திருவுளமிரங்கி அவளுடைய நாயகனாகிய சத்தியவானது உயிரை மீட்டுக் கொடுத்தருளிய உலகமாதாவாகிய உமையவள் என்னுடைய விண்ணப்பத்தைக் கேட்டு எனக்குத் திருவருள் புரிவாள்தானே. ஆனதால் இவைகளையிட்டு நாம் கலங்க வேண்டியதில்லை; எங்கள் அம்மாவுக்கும் ஆச்சிக்கும் மற்றவர்களுக்கும் இந்த நியாயத்தைச் சொல்ல, தங்கைச்சி, எனக்கு இப்பொழுது கூச்சமாயிருக்கிறது; ஆனதால் நீரே அவர்களுக்குஞ் சொல்லும், ஆண்டவன் கிருபையால் ஒருபிழையும் எங்களுக்கு நேராது'' என்று சொல்லித் தானும் தேறிக் காஞ்சனத்தையும் தேற்றினாள். உடனே இருவரும் அந்த அறையை விட்டுப் புறப்பட்டுத் தத்தம் தாயரும் கந்தசாமியும் கவலைப்பட்டுக் கொண்டிருக்குமிடத்திற்கு முகமலர்ச்சியோடுபோனார்கள்; இவர்களுடைய முகமலர்ச்சியைக் கண்டு அவர்களும் கவலைசிறிது நீங்கி இவர்களை அற்புதத்துடன் பார்த்தார்கள். புவனேசுவரி தனக்குச் சொன்ன விஷயங்களையெல்லாம் காஞ்சனம் விபரமாக எடுத்துச் சொன்னாள். கேட்ட சண்பகத்தம்மாள் மனத்திடமடைந்தாளாய் அவர்களைப் பார்த்து "எங்கள் அருமை மக்காள், நாங்கள் வயசிலும அனுபவத்திலும் அதிகப்பட்டுள்ளோமானாலும் புத்தியிலும் தெய்வ பக்தியிலும் நீங்கள் எங்களைக்காட்டிலும் அதிகப்பட்டிருக்கிறீர்கள்; உங்களைப் பிள்ளைகளாக உடைய எங்களுக்கு என்ன குறைவு வரப்போகிறது'' என்று இருவரையும் பாராட்டித் தானும் மனந் தேறினாள். இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்த சின்னம்மாளும் கந்தசாமியும கவலை நீங்கப் பெற்றனர்; பின்னரும் சிறிது நேரம் அங்கே இருந்துவிட்டுச் சண்பகத்தம்மாளும் மகளும் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு இராத்திரிலேறத் தங்கள் வீட்டிற்கு மீண்டுபோய் முழுவிபரத்தையும் முருகேசபிள்ளைக்கு எடுத்துச் சொன்னார்கள்; அவரும் கேட்டுக் கவலைநீங்கிச் சந்தோஷமடைந்தார். (வளரும்)

## மத யானையால் இருவர் கொல்லப்பட்டனர்

குருணாக்கலை செப் 12—

கல்கமுவையைச் சேர்ந்த கிராமமொன்றில் ஓர் ஆடவனும் அவரது மனைவியும் மத யானை யொன்றாற் கொல்லப்பட்டு இறந்ததாக வடமேற்கு மாகாணத் தலைவர் திரு. என். ஈ. ஏண்ஸ்டுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

இராவிற் காலஞ் சென்றவரின் நெல் வயலில் ஏதோ சத்தம் கேட்கவே, அவர் ஆடு மாடுகள் பயிரை அழிப்பதாகக் கருதித் தமது மனைவியுடனும் மற்றுமிருவருடனும் அங்குச் சென்றதாகவும் உடனே யானை அவரையும் அவரது மனைவியையும் கொன்றதாகவும் தெரிகிறது. அவர்களுடன் சென்ற மற்றுமிருவர் பலத்த காயங்களுடன் கிகவீரதெதியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த யானைக்கு வெறி பிடித்திருப்பதாக மாகாணத் தலைவர் பிரகடனஞ் செய்து யானைகளைப் பிடிப்பதற்கு 'லைசென்ஸ்'கள் வழங்கியிருக்கிறார்.

## முஸோலினியை நாஜியர் விடுவித்தனர்

### சிசிலியிலிருந்து இத்தாலிக்கு விமானத்தில் சென்றாராம்

லண்டன் செப் 13—

சிசிலியில் பலேர்மோ நகரத்துக் கருகிலிருக்கும் ஒரு கிராமத்தில் முஸோலினி விடுதலை செய்யப்பட்டாரென்றும் அவர் அங்கிருந்து ஒரு விமானத்தில் இத்தாலிக்குக் கொண்டுவரப்பட்டாரென்றும் ஊர்ஜிதமாகாத செய்திகள் கூறுவதாகச் சுவிஸ் ரேடியோ அறிவித்தது.

ஹிட்லரின் கூற்று

லண்டன் செப் 12—

ஹிட்லரின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட பின்வரும் அறிக்கையை ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் இன்று ஒலிபரப்பியது.

சில துரோகிகளால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த முஸோலினியை விடுவிப்பதற்காக ஜெர்மன் பாரசூட் துருப்புகளும் பாதுகாப்புப் படைகளும் இன்று நடவடிக்கை எடுத்துக் கொண்டன. இந்நடவடிக்கை வெற்றியளித்தது. முஸோலினி இப்போது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

பாஸிஸ்ட் தலைவர்களுக்கு விடுதலை

முஸோலினி வீழ்ச்சியடைந்ததற்குப் பிறகு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பாஸிஸ்ட் தலைவர்கள் ஜெர்மானியர் கைப்பற்றிய நகரங்களில விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். படோகிளியோ அதிகாரத்துக்கு வந்தபின் தலைதூக்கிவந்த சமதர்மிகள் ஜனநாயக வாதிகள் கிறிஸ்தவ சமதர்மிகள் மிதவாதிகள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு வருகிறார்கள். பாஸிஸ்ட் எதிர்ப்பாளர்கள் பலர் பொதுஜனங்களின் உதவியால் ஜெர்மானியரிடமிருந்து தப்பியிருக்கின்றனர். முப்பது இத்தாலிய படைகள் ஜெர்மானியருடன் சேர்ந்துகொண்டுவிட்டதாக பெர்லினிலிருந்து கிடைத்த செய்தி இங்கு ஊர்ஜிதம செய்யப்படவில்லை. அவை பாஸிஸ்ட் ராணுவத்தைச் சேர்ந்தவையென்று நம்பப்படுகிறது.

ஜெர்மானியருக்கெதிரான மனோபாவம் வட இத்தாலியில் பரவிவருகிறது. ரூரின் பகுதியிலிருக்கும் ரோமலின் படைகளோடு இத்தாலியப் படைகள் போராடிவருகின்றன. பீட்மண்ட் பகுதியில் எதிர்ப்பு பலமாக இருப்பதனால் செனோவா நகரையோ அல்லது வாரிஸ் நகரையோ ரோமல இன்னும் கைப்பற்ற முடியவில்லை. நேசதேசப்படைகளை இத்தாலிய மக்கள் உணவும் தங்குமிடமும கொடுத்து ஆதரிக்கின்றனர். வீதிகளில ஆயிரக்கணக்கான நேசதேச வீரர்களைக் காணலாம. மிலான வெனிஸ் பொலோனா ஆகியவட இத்தாலியநகரங்களிலிருக்கும் பொதுஜனங்கள் புதிய பாஸிஸ்ட் அரசாங்கத்தாரால வெளியிடப்பட்டு ஜெர்மன விமானங்களிலிருந்து போடப்பட்ட துண்டுப் பிரசுரங்களைக கண்டிக்கின்றனர்.

## றப்பர் விலையை அதிகரிக்க முடியாதாம்

றப்பர் விலையை மேலும் உயர்த்த முடியாதென்று குடியேற்றநாட்டு மந்திரி இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

றப்பர் விலை அதிகரிப்பது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும் குடியேற்றநாட்டு மந்திரிக்குமிடையில நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகள் மிகக விரைவில் வெளியிடப்படுமென்று தெரிகிறது.

## நீரில் மூழ்கி மூவர் மரணம்

### கல்கிசையில் நேர்ந்த கோரசம்பவம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை கல்கிசையில் இரண்டு சகோதரர்கள் உட்பட மூன்று வாலிபர்கள் நீரில் மூழ்கியதன் காரணமாக மரணமடைந்தனர்.

இருபத்தைந்து வயசுடைய திரு. மார்க்கண்டு தம்பி என்பவரும் 21 வயசுடைய அவர் சகோதரராகிய திரு. மார்க்கண்டு கிருஷ்ணசாமியும் அவர்களுடைய நெருங்கிய பந்துவான திரு. T. நாகேந்திரனும் கடற்கரைக்கு நீராடச் சென்றனர். அவர்கள் தண்ணீரிற் கஷ்டப்படும் போது சத்தமிடவே அருகே நீராடிக் கொண்டிருந்த அல்பிரெட் ஹவுஸ் கார்டின்ஸ் பங்களாவைச் சேர்ந்த திரு. டப்ளியூ. ஹமில்டனும் இன்னுஞ் சிலரும அவர்களை இரட்சிப்பதற்காக விரைந்து சென்றனர். ஆயின், ஜீவரட்சக உபகரணங்களெதுவும் அங்கு இல்லாததினால், அவர்களைக் காப்பாற்றச் சென்றவர்கள் ஒரு மூங்கிற் கம்பையும் கயிற்றையுமே ஜீவரட்சக உபகரணங்களாக உபயோகிக்க வேண்டியிருந்தது.

துர் அதிர்ஷ்ட வசமாகக் கடல் கொந்தளிப்பாக இருந்தது. மிகுந்த பிரயாசைப்பட்டு அவர்கள் அந்த மூன்று வாலிபர்களையும் மூர்ச்சையடைந்த நிலைமையிற் கரைக்குக் கொண்டு வந்தனர். கலகிசைப் பொலீஸார் செயற்கை மூலம் சுவாசமூட்டினரெனினும், அவர்கள் மூவரும் இறந்திருக்கக் காணப்பட்டனர்.

முன்னர்க் கல்கிசையிலிருந்த ஜீவரட்சகக் கருவி அப்புறப்படுத்தப்பட்டபின், அங்கு பலர் நீரில் மூழ்கி இறந்திருக்கின்றனரென்பதும இப்போது சமீப சில காலமாக இந்த இடத்தில் இராணுவத்தினருட் பலப் பலர்தினசரி நீராட வருவதனால் ஜீவரட்சகக் கருவி அவசியமென்று கல்கிசை வாசிகள் சென்ற காலங்களில் வற்புறுத்தி வந்திருக்கின்றனவென்பதும இங்கு குறிப்பிடத் தக்கது.

## பட்டினசபை வாக்காளர் நாமாவலிகள்

### பாணந்துறையில் விசாரணை

பாணந்துறை செப் 13—

பாணந்துறைப் பட்டினசபை வாக்காளர் நாமாவலிகள் சம்பந்தமான உரிமைகள் ஆட்சேபனைகள் ஆகியவை மீண்டும் நேற்றுப் பாணந்துறைப் பட்டினசபைக் காரியாலயத்தில் களுத்துறை உதவி மாகாணத் தலைவர் திரு. பி. ஜே. ஹட்ஸன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டன. பாணந்துறை மோட்டார்ப் போக்குவரத்துக் கம்பெனியைச் சேர்ந்த 46 சிப்பந்திகளுக்கு வாசஸ்தலம் சம்பந்தமான யோக்கியதாம்சங்கள் இல்லாமையால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை அனுமதிக்கப்படுவதைத் திரு. எம். லம்ரேட் பெரேரா ஆட்சேபித்தார்.

பட்டினசபைத் தலைவர் மிஸ்றர். டப்ளியூ. லியோபெர்னாண்டோவின் சாட்சியத்தைப் பதிவு செய்த பின், மிஸ்றர். ஹட்ஸன் பஸ் கம்பெனிஸ் தலத்தையும் காரியாலயங்களையும் பார்வையிட்டார். உதவி மாகாணத் தலைவர் செப்டம்பர் மாசம் 16-ந் திகதி வரை தமது தீர்ப்பைத் தவணையிட்டார்.

மிஸ்றர். பி. ஆர். சொட்ரிகோவின் பெயரை வாக்காளர் நாமாவலியிற் சேர்ப்பதைக் குறித்துத் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையை மிஸ்றர், ஹட்சன் நிராகரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவுநகைஏலவிற்பனை

1941ம் ஆண்டு தைமாசம் 18ம் திகதி தொடக்கம் 1942ம் ஆண்டு பங்குனிமாசம் 22ந்திகதி முடிய, கோண்டாவில் கிழக்கு லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் சி. நவரத்தின மென்பவரிடம் அடைவு வைக்கப்பட்ட நகைகள் இப்போது தவணை தப்பியபடியால் சட்டப்பிரகாரம் 1943 ம் ஆண்டு புரட்டாசி மாசம் 25-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு எடுபட்ட நகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

க. பொன்னப்பா
வெந்திஸ்மேஸ்தர்&கொம்மிஷனர்,
இணுவில், 7-9-43.
Mis 118, 9- & 16-9-43.

## சீனதேசிய அரசாங்கமும் பொதுவுடைமையும்

சுங்கிங் செப் 14—

சீனாவின் புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் மார்ஷல் சியாங்கை ஷேக் சீனமத்திய நிர்வாக சபையின்முன் பேசும்போது சீன அரசாங்கத்துக்கும் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குமிடையிலிருக்கும் தொடர்புகளைப் பற்றி விவரித்தார்.

இந்தத் தொடர்புகள் சம்பந்தமான நிபந்தனைகள் பின்வருமாறு:— (1)சீன தேசியப் பிரதேசத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றும் கொள்கையைப் பொதுவுடமைக்கட்சி கைவிட்டுவிட வேண்டும். (2) தேசிய அரசாங்கத்தின் துருப்புகளைப் பல இடங்களிலும் தாக்கி அதன்மூலம் யுத்தத்தை நடத்த முட்டுக்கட்டை போட்டு வந்த பழைய முறைகளை விட்டுவிட வேண்டும். (3) தற்போதைய சோவியத் ஸ்தாபனத்தைக் கலைத்து விடுதல் (4) கோமிங்டான் ஆட்சியைப் புரட்சிமூலம் வீழ்த்தும் கொள்கை கைவிடப்படவேண்டும். (5) பலாத்காரமாக நிலங்களைப் பறிமுதல் செய்யக்கூடாது. (6) செஞ்சேனையைக் கலைத்துத் தேசிய அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழுள்ள தேசிய சேனையோடு அதனைச் சேர்த்துவிடல் வேண்டும்.

மார்ஷல் சியாங்கை ஷேக் கூறியதாவது:-சீனப் பொதுவுடைமைப் பிரச்னை ஒரு அரசியல் பிரச்னையேயென்றும் அது அரசியல் வழிகளாலேயே 'தைஸல்' செய்யப்படவேண்டுமென்றும் நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் நமது உள் நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்கும்போது நாம் மிதமாகவும் பொறுமையோடும் நடந்துகொள்ள வேண்டும். இத்தகைய ஒரு கொள்கையை நாம் அனுஷ்டித்து வந்தாற் பொதுவுடைமைக்கட்சியினரின் தீவிரத் தன்மையும் சங்கடம் விளைக்கும் மனப்பான்மையும் குறைந்து நமது உண்மையான போக்கினால் மனம் மாறிவிடுவார்களென்று நாம் எதிர்பார்க்கலாம்.

## யுத்த நிதிகளுக்கு நன்கொடை

ஜோர்ஜ் மன்னர் மாலுமிகள் நிதிக்கு இதுவரை கிடைத்த நன்கொடைகளின் மொத்தத்தொகை ரூபா 334660 சதம் 90 ஆகும்.

சேண்ட் டன்ஸ்டன் நிதி

சேண்ட் டன்ஸ்டன் நிதிக்கு இதுவரை மொத்தம் ரூ 134882 சதம் 4 கிடைத்திருக்கிறது.

**விளம்பரமின்றேல்**

**பெரும்பணமில்லை**

## விடுமுறையின்பின் பாடசாலை ஆரம்பம்

கொழும்பிலும் வெளியூர்களிலும் உள்ள பாடசாலைகள் ஆகஸ்ட் விடுமுறையின்பின் மீண்டும் இவ்வாரம் ஆரம்பித்திருக்கின்றன. பல பாடசாலைகள் சென்றவாரம் ஆரம்பமாயின.

றோயல் கல்லூரியின் கொழும்புக் கிளையில் சென்ற திங்கட்கிழமை வேலை ஆரம்பித்தது. இந்த ஸ்தாபனத்துக்கு நியமிக்கப்பட்ட புதிய உபதலைமை ஆசிரியர் மிஸ்டர். ஜே. ஸி. ஏ. கொறியாவும் தேகாப்பியாசப் போதனாசிரியரான மிஸ்டர். எம். ஜே. கே. கந்தளாயும் தங்கள் கடமைகளை ஏற்றுக் கொண்டனர்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

சங்க நூற் கருத்துக்கள் சம்பந்தமான 5வது பிரசங்கம் சென்ற ஞாயிற்றுக்கிழமை (5-9-43) பிற்பகல் 5-45 மணிக்கு கொழும்புத் தமிழ்க் கழக மண்டபத்தில் நடைபெற்றது. திரு. சோம சரவணபவன் 'நெடுநல் வாடை' பற்றி ஆராய்ச்சி நடத்தினர்.

திரு. வை. முத்துக்குமாரசாமி முதலியோர் குறிப்புரை கூறினர். கூட்டத்துக்குத் திரு. சே. க. சண்முகம்பிள்ளை தலைமை வகித்தார்.

## தற்காலத் தமிழ் இலக்கியம்-கவிதை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். பாட்டின் உருவம் மாத்திரமல்ல; பொருளுமே புரட்சியுள்ள கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன.

"தனியொரு மனிதனுக் குணவில்லை யெனிற், சகத்தினை அழித்திடுவோம்" என்கிறார். "எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று பாடுகின்றார். ஆனால், பாரதிதாசன் சில சந்தர்ப்பங்களிற் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாகி விடுகிறார். புதுமைக்குப் புதுமையாக விளங்குகிறார். சில சமயங்களில் அதீதமான சீர்திருத்தங்களைச் சிபார்சு பண்ணுகிறதுபோற்றெரியும்.

பாரதி தாசன் கவிதைகளில் பாரதியின் ஆவேசம் முழுவதும் இருக்கிறது. அவருடைய கலைப் பண்பும், கட்டும், மெருகும், கற்பனைகளும் உண்டு; இன்னிசை குறைவு ஆவேசவாத வேகத்துடன் கட்டுக்கடங்காத காட்டாறுபோலப் பாரதிதாசனின் பாட்டுகள் சீர்கெட்ட நமது சமூக வழமைகள் மீது வாரியடித்துக் கொண்டு பாய்கிறது. சுவாமி சுத்தானந்த பாரதியாரின் கீர்த்தனைகள் இசைநயமுடையவை. நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் சில தேசியப் பாட்டுக்கள் நயமாயிருக்கின்றன.

இவர்களை விடப்பல இளம் கவிகள் புதிதுபுதிதாய்க் கவிகளையாத்து வருகின்றனர். பாரதியின் பரம்பரை மாறுமோ வென்பது ஐயத்துக் கிடமானதே.

## வடஇலங்கை முத்தமிழ் மன்றம்

3ம் பக்கத் தொடர்ச்சி

ருமான இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பெரும போராசிரியர் உயர் திரு. விபுலானந்த சுவாமிகள் இம்மன்றப் போஷகராயிருந்து மன்றத்திற்காம் உதவிகள் புரிவதற்கு உளம்பற்றியுளார்.

சுவாமியவர்கள் 3-10-43 ஞாயிறுவாரம் மாலை 'முத்தமிழ்' என்னும் பொருள்பற்றி இம்மன்ற ஆதாவில் வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு சொற்பொழிவாற்றுவர். அதன்பின் இசைநிகழ்ச்சிகள் நடைபெறுமென இம் மன்றத் தற்காலிக காரியதரிசி திரு. சு. ஸ்ரீநிவாசன் அறிவிக்கின்றார்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வியாழன் செப் 16

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 இரு நாலிசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கிரனூர் எஸ் ஜயலக்ஷ்மி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கிரனூர் எஸ் ஜயலக்ஷ்மிபுல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே பி சுந்தராம்பாள் பாட்டு 9 கார்முகம் இசைச்சித்திரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 கானதாஸா பாட்டு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வெள்ளி செப் 17

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலை இசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காரைக்குறிச்சி கே எஸ் கிருஷ்ணையர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காரைக்குறிச்சி கே எஸ் கிருஷ்ணையர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2—05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எஸ் பாலகிருஷ்ணன் பாட்டு 5-40 தூான்ஷரீப் 6 மன்னூர்குடி எம் மாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம் 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஜயார்விஸ் குடும்பம் (தொடர் சித்திரம்) 8 டி எஸ் பகவதி பாட்டு 8-30 மன்னூர்குடி எம்மாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் (ஆங்கிலம்) 10 திரைகானம்† 10-20 லலிதாபருலேகர்† 10-30 முடிவு.

### சனி செப் 18

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் வைகுண்டம்ஐயர் வயலின் 9 முடிவு.

1 டி எம் ஹம்சவல்லி பாட்டு 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 தோடி † 2 தமிழில் செய்திகள் 2-05 வைகுண்ட ஐயர் வயலின் 2.30 முடிவு.

மாலை 5 டி எம் ஹம்ஸவல்லி பாட்டு 5-40 திருவாய்மொழி விளக்கம் 6 திரைக்கதம்பம் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 தென்னாட்டு கோயிற் சிற்பம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 மதராஸிலுள்ளபடி ராஜம் புஷ்பவனம் பாட்டு 9-15 கண்ணன் தேவி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆங்கிலநாடகம்10இசைவேளை†10-30முடிவு

### ஞாயிறு செப் 19

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸி ஆர் சாரதா வீணை பாட்டு 9 முடிவு.

12 கதம்பம்† 12 30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி வைத்தியநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக் கதம்பம்† 2-30 முடிவு.

மாலை 5 பி வைத்தியநாதன் பாட்டு 5-40 தேவாராதனை ஆங்கில† 6 ஸி ஆர் சாரதா வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள்6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புத்தக விமர்சனம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 எங்கள் தபால்பெட்டி 8 ஸ்ரீமதி பரிணயம் சங்கீத உபந்நியாசம் 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 பட்டினத்தார் பாடல் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் செப் 20

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சேறை வி சுப்பராயபிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 மீனாக்ஷி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருச்சேறை வி சுப்பராயபிள்ளை நாகஸ்வரம் 5.45 இசைப்பயிற்சி 6 மீனாக்ஷி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஆங்கிலநாடகம் 10-05 டெல்லி 2ல் உள்ளபடி கதம்பம் †10-30 முடிவு.

## அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காசதிராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளறுகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)

**குறைந்த விலையில் துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 16, September 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org